


**02.05.2025**

**தலைப்பு செய்திகள்**

**1.** சாகர்மாலா கடல்சார் திட்டத்தை வலுப்படுத்த மத்திய அரசு மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

**2.** மாறிவரும் உலக சூழலுக்கு ஏற்ப இளையோரின் திறன்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் வேவ்ஸ் உச்சிமாநாட்டில் கூறியுள்ளார்.

**3.** தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 151 பேருக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்தில் இன்று வழங்கினார்.

**4.** தமிழகத்தில் குற்ற சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

**5.** சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் அனிருத் நெதர்லாந்தின் மெட்வே இணை இன்று களமிறங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

************

**பிரதமர்**

சாகர்மாலா கடல்சார் திட்டத்தை வலுப்படுத்த மத்திய அரசு கடல்சார் மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் விழிஞ்ஞத்தில் 8 ஆயிரத்து 900 கோடி ரூபாய் மதிப்பில் நாட்டின் முதலாவது பகுதி தானியங்கி துறைமுகத்தை இன்று நாட்டிற்கு அர்ப்பணித்து பேசிய அவர், நாட்டின் கடல்சார் கட்டமைப்பு மேம்பாடுத்தும் பண்முக துறைமுகமாக இது திகழும் என்றார்.

புதிய அத்யாய வளர்ச்சியின் மாதிரியாக துறைமுகமாக இது திகழ்வதாக கூறிய அவர் இதன்மூலம் நாட்டில் பொருளாதார ஸ்திரதன்மையும், ஏராளமான பயன்களும் கிடைக்கும் என்றார்.

இத்துறைமுகம் எதிர்காலத்தில் மூன்றடுக்கு துறைமுகமாக மேம்படுத்தப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கேரள முதலமைச்சர் திரு.பிணராயி விஜயன், நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

பிரதமர் இன்று பிற்பகல் ஆந்திர மாநிலம் அமராவதியில் 58 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை இன்று தொடங்கிவைக்கிறார்.

************

**வேவ்ஸ்**

## Waves உச்சிமாநாடு : Music

வளர்ச்சி அடைந்த இந்தியா உருவாவதில் கலாச்சாரம் படைப்பாற்றல் திறன் தொழில்நுட்பம் போன்றவை இன்றியமையா பங்காற்றுவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மும்பையில் வேவ்ஸ் ஒலி ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாட்டின் 2ஆவது நாள் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், மாறிவரும் உலக சூழலுக்கு ஏற்ப இளையோரின் திறன்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று அவசியத்தை வலியுறுத்தினார்.

முறையான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், படைப்பாற்றல் திறன் போன்றவற்றின் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

வளர்ச்சி அடைந்த இந்தியா பாதையை முன்னெடுத்துச்செல்ல நமது கலாச்சாரம், பாரம்பரியம், சிந்தனைகள், படைப்பாற்றல் திறனுக்கு நாம் குரல் கொடுத்து செயல்படுத்த வேண்டும் என்றார்.

அனைவருக்கும் படைப்பாற்றலை உறுதிசெய்வதால் அறிவுதிறன் தொடர்பான சவால்களை நாம் கவனத்துடன் எதிர்கொள்ள வேண்டும் என்றார்.

வேவ்ஸ் ஒலி ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக உலகளாவிய ஊடக கலந்துரையாடல் நிகழ்வு இன்று நடைபெறுகிறது.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் மற்றும் இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் இதில் பங்கேற்றுள்ளனர்.

உலக ஊடகங்கள் மற்றும் பொழுதுபோக்கு சூழலுடன் ஒருங்கிணைந்து செயல்பட ஏதுவாக இந்த கலந்துரையாடல் நடைபெறுகிறது.

கலந்துரையாடல் நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரபல ஹிந்தி திரைப்பட நடிகர் திரு.அமீர்கான் பொழுதுபோக்கு ஊடகங்களின் தலைமை நாடாக இந்தியா உருவாக வேவ்ஸ் வழிகோலும் என்றார்.

பிரபல திரைப்பட தயாரிப்பாளர் ரித்தேஸ் ஷித்வாணி பேசுகையில், உலகத்தின் கவனத்தை இந்திய திரைப்படம் ஈர்ப்பதற்கான வாய்ப்பை இந்த வேவ்ஸ் உச்சிமாநாடு வழங்கியிருப்பதாக குறிப்பிட்டார்.

வெளியுறவு அமைச்சகத்துடன் இணைந்து மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இவ்விழாவில் சர்வதேச ஊடகங்களுடன் ஒருங்கிணைப்பு, சிறந்த நடைமுறைகளை அமல்படுத்துவது, கொள்கை விஷயங்களில் புதிய வாய்ப்புகளை தோற்றுவிப்பது, திறன்பரிவர்த்தனை உலக ஊடக திறன்கட்டமைப்பு உள்ளிட்டவை குறித்து விரிவாக ஆலோசிக்கப்படுகிறது.

ஆசிய, ஐரோப்பிய, ஆப்பிரிக்க, அமெரிக்க கண்டங்களை சேர்ந்த 60க்கும் மேற்பட்ட நாடுகள் இதில் பங்கேற்றுள்ளன.

## Music

************

**குடியரசு தலைவர்**

மூத்த குடிமக்கள் குடும்பங்களின் முக்கிய அங்கம் வகிப்பதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசு தலைவர் மாளிகையில் மூத்த குடிமக்கள் தொடர்பான நிகழ்ச்சியில் இன்று பங்கேற்ற அவர் சமூகத்தின் வழிகாட்டியாக மூத்த குடிமக்கள் திகழ்கிறார்கள் என்றார்.

மூத்த குடிமக்களின் வாழ்க்கை தரம் பாதுகாப்பு சுகாதாரத்திற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மூத்த குடிமக்கள் அரசின் ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் ஜன் ஆரோக்கிய திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதை அவர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வின்போது வேலூர் மாவட்டம் அரியூரில் அரசு சாரா நிறுவனத்தின் சார்பிலான முதியோர் இல்லத்தையும் காணொலி வாயிலாக குடியரசு தலைவர் தொடங்கிவைத்தார்.

இதனிடையே இந்த இல்லத்தின் முதியவர் ஒருவர் பேசுகையில்

**வாய்ஸ்**

இந்நிகழ்வின் ஒருபகுதியாக குடியரசு தலைவர் பல்வேறு நல திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

மத்திய அமைச்சர் டாக்டர் வீரேந்திரகுமார் இந்நிகழ்வில் பங்கேற்றார்.

************

## JEE - நீட்

பொறியியல் பாடப்பிரிவின் சேர்க்கைக்கான JEE பிரதான தேர்விற்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் இன்றுடன் முடிவடைகிறது.

இதனிடையே இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவு தேர்வு நாடுமுழுவதும் நாளை மறுநாள் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

550 நகரங்களில் 15 லட்சம் மாணாக்கர் இத்தேர்வை எழுத உள்ளனர்.

தமிழகத்தில் ஒன்றரை லட்சம் மாணாக்கர் நீட் தேர்வை எழுதுகின்றனர்.

தேர்வை ஒட்டி சிறப்பு போக்குவரத்து வசதிகளும், விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

************

## முதலமைச்சர்

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 151 பேருக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்தில் இன்று வழங்கினார்.

மாநிலத்தில் உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும் 3 விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருதினையும் வழங்கி முதலமைச்சர் கவுரவித்தார்.

இதனிடையே மாநிலத்தில் அதிகரித்து வரும் தெரு நாய்களை கட்டுப்படுத்துவது குறித்து சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் இன்று ஆலோசனை மேற்கொள்கிறார்.

************

## அன்பில் மகேஷ்

தமிழ்நாட்டில் 6ஆம் வகுப்பு முதல் செயற்கை நுண்ணறிவு கல்வி, வரும்-கல்வியாண்டில் நடைமுறைபடுத்தப்படும் என்று மாநில பள்ளகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாணாக்கர் தரமான கல்வியை பெற வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார்.

சி.பி.எஸ்.இ பாடதிட்டத்தின் கீழ் 3, 5, 8 ஆம் வகுப்புகளில் தோல்வி நடைமுறை, பள்ளிகளில் இடைநிற்றலை அதிகரிக்கும் என்று குறை கூறினார்.

**வாய்ஸ்**

************

**மதிவேந்தன்**

தமிழகத்தின் அனைத்து ஊரக பகுதிகளிலும் அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமை அளித்து திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் அணைப்பாளையம் ஊராட்சியில், அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் நல திட்ட பணிகளை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளின் அடிப்படையில் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதாக கூறினார்.

************

**எடப்பாடி**

தமிழகத்தில் குற்ற சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மாநிலத்தில் நடைபெறும் தொடர் குற்ற சம்பவங்களால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக குறை கூறியுள்ளார்.

இதனிடையே அஇஅதிமுக செயற்குழு கூட்டம் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தலைமையில் சென்னையில் இன்றுமாலை நடைபெறுகிறது.

************

**நயினார் நாகேந்திரன்**

நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டை உடனடியாக களைய தமிழக அரசு முன்வர வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் முக்கூடல் அணையிலிருந்து 10 நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே தண்ணீர் விடுவிக்கப்படுவதாக குறை கூறினார்.

************

**ராதாகிருஷ்ணன்**

ராமநாதபுரம் மாவட்டம் வழுதூரில் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு சொந்தமான 196 மெகாவாட் மின் உற்பத்தி இயற்கை எரிவாயு சுழலி நிலையத்தை தமிழ்நாடு மின்வாரிய தலைவர் டாக்டர் ஜே.ராதாகிருஷ்ணன் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

கோடைக்கால உச்சமின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மின் உற்பத்தி மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைள் தயார்நிலையில் இருக்க அவர் அறிவுறுத்தினார்.

ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன் ஜீத் சிங்காஹ்லோன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

************

**திருவண்ணாமலை**

திருவண்ணாமலையில் சித்ரா பௌர்ணமி கிரிவல முன்னேற்பாட்டு பணிகளை ஆட்சித்தலைவர் திரு.தர்ப்பக ராஜ் இன்று ஆய்வு செய்ததாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

**வாய்ஸ்**

************

**இருவரி**

**தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறில் உள்ள பால் விவசாயிகள்** பால் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தி இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தாங்கள் கொண்டுவந்த பாலை தரையில் கொட்டி போராட்டம் மேற்கொண்டனர்.

**புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் வட்டாரம்** மிரட்டுநிலை கிராமத்தில் விவசாயிகள் சாகுபடி செய்த பயிர் குறித்த விவரங்களை மின்னணு முறையில் பதிவேற்றம் செய்யும் பணியை ஆட்சித்தலைவர் திருமதி அருணா இன்று ஆய்வு செய்தார்.

**தஞ்சாவூர் பெருவுடையார் திருக்கோவில்** சித்திரை தேரோட்டம் வரும் 7ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் மாவட்டத்திற்கு அன்று உள்ளூர் விடுமுறை அளித்து ஆட்சித்தலைவர் திருமதி பிரியங்கா பங்கஜம் உத்தரவிட்டுள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் சிறு பாசன** கன்மாய்கள் புத்துயிர் ஊட்டும் திட்டத்தின் கீழ் நடப்பாண்டு 442 சிறு கன்மாய்கள் தூர்வாரப்படும் என்று ஆட்சித்தலைவர் திருமதி ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

************

**மண் பானை**

கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்ததை தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டத்தில் இயற்கை முறையில் குளிர்ந்த நீரை அளிக்கும் மண் பானை விற்பனை அதிகரித்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக வியாபாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

************

**கோவில்**

**வேலூர் கோட்டை ஜலகண்டேஸ்வரர் ஆலய சித்திரை** பிரம்மோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. முக்கிய நிகழ்வான பூ பல்லக்கு வரும் 12ஆம் தேதி நடைபெறும்.

**நாகை சிக்கல் சிங்காரவேலர் திருக்கோவில் சித்திரை பெருவிழா** இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

************

**டென்னிஸ்**

ஆஸ்திரியாவில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் அனிரூத் சந்திரசேகர், நெதர்லாந்தின் மெட்வே இணை – ஆஸ்திரியாவின் நிக்கோ, சுவிர்சர்லாந்தின் ஸெரோம் இணையை இன்று எதிர்கொள்கிறது.

************

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் அஹமதாபாத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு குஜராத் டைட்டன்ஸ் - சன் ரைசர்ஸ் ஹைதராபாத்தை எதிர்கொள்கிறது.

************